# பனித்துளி செய்திகள்!



"அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!" (சங்கீதம் 33:9)

துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!

(திங்கள்தோறும்)

28.10.2024


## 44. விலையேறப்பெற்ற அவரது, மாறாத கிருபை!

**ம**கா கிருபை நிறைந்தவர் நம் ஆண்டவர் இயேசு! இந்த உலகத்தின் மனுக்குலம் அனைத்துமே அவரது அன்பான செட்டைகளின் நிழலில்தான் வாழ்கிறார்கள்! அவர்கள் தீயோரா யிருந்தாலும், நல்லோராயிருந்தாலும், 'மனுப்புத்திரர்' அனைவரையும் அன்புகூர்ந்து காப்பதை 'தேவனின் அருமையான கிருபை' என்றே வேதம் கூறி வியக்கின்றது! (சங்.36:7).

ஆகிலும், அவர் மானிடர் எல்லோர்மீதும் காண்பித்திடும் கிருபையை "கிருபை, கிருபை" என வெறுமையாய் கொண்டாடிச் சென்று விடாதீர்கள்! 10-ம் வசனம் குறிப்பிடும் "உம்மை அறிந்த வர்கள் மேல் உமது கிருபை" என்ற தனிப்பட்ட பாக்கியமே பேரின்ப நித்தியானந்தம்! அது, அவரே நம் மேய்ப்பனாய் நின்று நடத்தும் "நம் ஜீவனுள்ள நாட்களெல்லாம்" தொடரும் நிலைத் திருக்கும் கிருபை! (சங்.23:6). சத்துருக்களோ, மரண இருளோ போன்ற யாவற்றிலிருந்தும் காத்திடும் போதுமான அந்த கிருபை, கர்த்தரை தன் சொந்த மேய்ப்பராய் பெற்றவர்களுக்கே அருளப் படுகிறது! இந்த பாக்கியமே, நமக்கும் சொந்தமாய் மாறக்கடவது!

– ரத்னம்